உலக சினிமாவின் முதல் ஆக்‌ஷன் ஹீரோ: பஸ்டர் கீட்டன் 130



நம்மூர் கவுண்டமணி-செந்தில், வடிவேலு, விவேக்கில் துவங்கி எத்தனையோ நகைச்சுவை நடிகர்கள் வந்து போனார்கள். சார்லி சாப்ளின் நம்மைச் சிரிக்க வைத்தார், அழவும் வைத்தார். ஆனால், தன் முகத்தில் அணுவளவு கூட உணர்ச்சியைக் காட்டாமல், ஒரு கிரானைட் கல்லைப் போல முகத்தை வைத்துக்கொண்டு, உலகத்தையே குலுங்கிச் குலுங்கிச் சிரிக்க வைத்த ஒரு விசித்திர



அட்டைப்படக் கட்டுரை

ஜி.ஏ. கௌதம்

Instagram: @editorgowtham

Email: goodbadeditor@gmail.com



அட்டை ஓவியம்

ஜீவா







மனிதர் உண்டென்றால், அது பஸ்டர் கீட்டன் (Buster Keaton) மட்டுமே. ரயில் தடம் புரளலாம், வீடே இடிந்து தலையில் விழலாம், இவ்வளவு ஏன்? உலகமே அழியலாம். ஆனால் கீட்டனின் முகத்தில் சிறு அசைவும் இருக்காது. அந்த இறுகிய முகம் அதுதான் அவரின் அடையாளம்.

இன்றைய தலைமுறைக்கு 'மிஷன் இம்பாசிபிள்' (Mission: Impossible) படத்தில் டாம் குரூஸ் விமானத்தில் தொங்குவதோ, 'ஜான் விக்' படத்தில் கியானு ரீவ்ஸ் இடைவிடாமல் சண்டையிடுவதோ பிரமிப்பாக இருக்கலாம். ஆனால், CGI என்கிற கணினி மாயம் இல்லாத, Green Matte கண்டுபிடிக்கப்படாத, முறையான பாதுகாப்பு உபகரணங்களே இல்லாத ஒரு காலத்தில், மரணத்துடன் கண்ணாமூச்சி ஆடியவர் அவர். சினிமா சரித்திரத்தில் ஓடுவதையும், விழுவதையும், தொங்குவதையும் ஒரு கலை வடிவமாக மாற்றிய முதல் 'ஆக்ஷன் ஹீரோ'வும் இவரே.

கிளீவ்லேண்ட் மௌனப் பட விழா தொடங்கி, மிச்சிகனில் உள்ள 'இன்டர்நேஷனல் பஸ்டர் கீட்டன் சொசைட்டி' வரை உலகம் முழுவதும் இவரது 130வது பிறந்தநாளைக் கொண்டாடித் தீர்த்துவிட்டன. பெய்ஜிங்கில் உள்ள சீனத் திரைப்பட ஆவணக்காப்பகம், கீட்டனை உலகின் 'நவீன மனிதனின்' (Modern Man) அடையாளமாக முன்னிறுத்துகிறது.

பஸ்டர் கீட்டனின் 130வது வயதில் அவரை நினைவு கூறும் போது, அவர் 20 ம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே மாட்டிக்கொண்ட ஒரு 'டைம் டிராவலர்' போலவே தோன்றுகிறார். டிஜிட்டல் கேமராக்களின் கண்காணிப்பு, அல்காரிதங்களின் அபத்தம், இயந்திரங்களுக்கும் மனித உடலுக்குமான சிக்கலான உறவு என இன்றைய நவீன யுகம் சந்திக்கும் அத்தனை விஷயங்களுக்கும், அன்றே தன் உறைந்த முகத்துடன் ஒரு முன்னுதாரணமாக நின்றவர்.

சிரிப்புத் தொழிற்சாலை

உலகின் முதல் சினிமா பிறந்த (லூமியர் சகோதரர்கள் பாரிஸில் தங்கள் முதல் படத்தை திரையிட்ட) அதே 1895 ஆம் ஆண்டில், அக்டோபர் 4ம் தேதி ஜோசப் ஃப்ரான்க் கீட்டனும் (Joseph Frank Keaton) பிறந்தார்.

1917ல் கீட்டன் சினிமாவுக்குள்



நுழைவதற்கு முன்பு, அமெரிக்கத் திரையுலகம் சத்தம் மிகுந்த ஒரு சந்தை. இன்னும் துல்லியமாகச் சொன்னால், ஹென்றி ஃபோர்டு எப்படி கார்களை அசெம்பிள் செய்தாரோ, அப்படித்தான் அன்றைய ஹாலிவுட் ஒரு தொழிற்சாலையைப் போல சிரிப்பை உற்பத்தி செய்தது.

அது ‘நிக்கலோடியன்’ (Nickelodeon) காலம். ‘தி கிரேட் ட்ரெயின் ராபெரி’ (The Great Train Robbery, *1903*) என்ற உலகின் முதல் ஆக்‌ஷன் திரைப்படத்தின் மூலம், மக்களிடையே திரைப்படங்களுக்கு மிகப்பெரிய வரவேற்பு ஏற்பட்ட காரணத்தால், எண்ணிக்கையில் வெறும் *8*ஆக இருந்த நிக்கலோடியன்கள் எனும் சிறிய திரையரங்குகள் *1908*க்குள் *10,000*ஆகப் பெருகின. இதனால், *1905* முதல் *1915* வரை அமெரிக்காவின் மூலை முடுக்கெல்லாம் நிக்கலோடியன்கள் காளான்களாக முளைத்திருந்தன. உள்ளே நுழையக் கட்டணம் *5* சென்ட். (நிக்கல் என்றால் *5* சென்ட் நாணயம். ஓடியன் என்றால் கிரேக்க மொழியில் கூரையிடப்பட்ட அரங்கு).

இதன் பார்வையாளர்கள் பெரும்பாலும் ஐரோப்பாவிலிருந்தும், மற்ற நாடுகளிலிருந்தும் பிழைப்புத் தேடி வந்த குடியேறிகள். அவர்களுக்கு நுணுக்கமான கதையோ, வசனமோ

தேவையில்லை. கண்கள் விரியும்படியான வேகம் வேண்டும். யாராவது ஓட வேண்டும், யாராவது விழ வேண்டும், காவல்துறையினர் துரத்த வேண்டும். தங்கள் வாழ்க்கையில் இருக்கும் பதற்றத்தை, திரையில் வேறொருவன் படும்பாடாகப் பார்த்துச் சிரிக்க விரும்பினார்கள்.



இந்தத் தேவையைச் சரியாகப் புரிந்துகொண்டவர் மேக் செனட் (Mack Sennett). கீஸ்டோன் ஸ்டுடியோஸ் (Keystone Studios) என்ற பெயரில் அவர் ஒரு சாம்ராஜ்யத்தையே நடத்தினார். இவருடைய பாணிக்கு 'ஸ்லாப்ஸ்டிக்' (Slapstick) என்று பெயர். (பழைய இத்தாலிய நாடகங்களில், நடிகர்களை அடிப்பதற்குப் பயன்படுத்தும், சத்தம் எழுப்பும் இரட்டைக் கட்டை).

செனட்டின் படங்களில் தர்க்கத்திற்கு இடமே இல்லை. அவர்கள் தயாரிப்பது எந்தப் படமாக இருந்தாலும் அவை இந்த மூன்று விதிகளுக்குள் அடங்கிவிடும்.

- விதி 1: சும்மா இருப்பவனை எட்டி உதை.
- விதி 2: திரையில் நடிகர்களின் ஓட்டத்தை வேகப்படுத்து.
- விதி 3: ஒரு கேக் இருந்தால், அது நிச்சயம் யார் முகத்திலாவது வீசப்பட வேண்டும்.

அவருடைய புகழ்பெற்ற 'கீஸ்டோன் காப்ஸ்' (Keystone Kops) என்ற காவல்துறைப் படை, இன்றும் பிரபலம். அனைவரும் ஒரு கும்பலாக ஓடுவார்கள், இடித்துக் கொள்வார்கள், வழுக்கி விழுவார்கள். தனிமனித ஆளுமை என்பதே கிடையாது. இதற்குத் தேவையான நடிகர்கள் 'வாட்வில்' (Vaudeville) எனப்படும் மேடை நாடகங்களிலிருந்து வந்தார்கள். இது ஒரு கடுமையான களம். மேடையில் ஏறிய சில நொடிகளில் நீங்கள் கூட்டத்தைச் சிரிக்க வைக்கவில்லை என்றால், கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிடுவார்கள். இதனால் வாட்வில் நடிகர்கள் ஒருவித பதற்றத்துடனேயே இருப்பார்கள். கடைசி பெஞ்சில் இருப்பவனுக்கும் முகம் தெரிய வேண்டும் என்பதற்காக, மிகைப்படுத்தி நடிப்பார்கள். கைகளை ஆட்டி, கண்களை உருட்டி, சத்தமாக உடல்மொழி காட்டுவார்கள். திரைப்படம் என்பது ஒரு நுண்ணிய ஊடகம். கேமரா லென்ஸ் நம் முகத்திற்கு மிக அருகில் வந்துவிடும் என்பதைப் பல நடிகர்கள் உணரவில்லை. அவர்கள் கேமராவைப் பார்த்து கத்தினார்கள், முறைத்தார்கள்.



அந்த இரைச்சலான, மிகைப்படுத்தப்பட்ட, அவசரமான உலகத்தில், செனட்டின் திரைப்படங்களுக்கு மாற்றாக, உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த சார்லி சாப்ளின் என்றொரு மாமேதை உருவாகிக்கொண்டிருந்தார். அதுவரை நகைச்சுவை என்பது கீழே விழுவது மட்டும்தான் என்று நம்பிக்கொண்டிருந்த ஹாலிவுட்டில், கீழே விழுந்தவனின் வலியை முதன்முதலாகப் பேசியவர் அவரே. செனட்டின் உலகம் ஒரு தொழிற்சாலை என்றால், சாப்ளின் அங்கே ஒரு பூங்காவை அமைத்தார். மற்றவர்கள் கேக்கை முகத்தில் வீசியபோது, சாப்ளின் அந்த கேக்கை வாங்கிக்கொண்டு, பசியோடு அதைப் பார்த்தார். அந்த ஒரு வினாடி... அந்த ஒற்றைப் பார்வை... ஸ்லாப்ஸ்டிக் நகைச்சுவையின் இலக்கணத்தையே மாற்றியது.

இந்த இரு இமயங்களுக்கும்

இடையில்தான் கீட்டன் உள்ளே வருகிறார். கார்ட்டூன்களில் ஒரு பாத்திரம் கட்டிடத்தைத் தாண்டி ஓடினால், கீழே பார்க்கும் வரை விழாது. அது புவியீர்ப்பு விதியை கேலி செய்யும் ஒரு நகைச்சுவை பாணி. ஆனால் கீட்டன், நியூட்டனின் விதிகளைத் தன் இடுப்பில் கட்டிக்கொண்டு திரிந்தவர். அவரது உலகம் 'வெக்டார்' மற்றும் 'விசை' ஆகியவற்றால் ஆனது. ஒரு பொருள் எந்த வேகத்தில் வருகிறது, எந்தக் கோணத்தில் இடித்தால் நாம் எங்கு சென்று விழுவோம் என்ற துல்லியமான கணக்கு அவரிடம் இருந்தது.

அதுவரை கேமரா என்பது, நாடகம் நடக்கும் மேடைக்கு முன்னால் அமர்ந்திருக்கும் ஒரு பார்வையாளன்; அவ்வளவுதான். நடிகர்கள் கேமராவுக்கு முன்னால் நடிப்பார்கள். ஆனால், கீட்டன் அப்படியல்ல. கேமராவை கதையின் ஒரு பாத்திரமாக மாற்றிய முதல் 'தொழில்நுட்பக் கலைஞர்' அவர்தான்.

வலியறியாச் சிறுவன்

பஸ்டர் கீட்டன் பிறக்கும்போதே ஒரு நடிகராகத்தான் பிறந்தார். அப்பா ஜோ கீட்டனின் 'தி த்ரீ கீட்டன்ஸ்' (The Three Keatons) நாடகக்குழுவில் தனது மூன்றே வயதில் கீட்டன் இணைந்தார். நாடகக் குழுவின் முக்கிய அம்சம் வன்முறை. ஆனால், அது ஒரு நேர்த்தியான வன்முறை. அப்பா ஜோ, மேடையில் மகனிடம் வம்பிழுப்பார். சிறுவன் பஸ்டர் பதிலுக்குச் சீண்டுவான். இதனால் அவரது தந்தை ஜோ, சிறுவன் கீட்டனைத் தூக்கி வீசுவார். ஆர்கெஸ்ட்ரா குழி, பார்வையாளர்கள் மீது என பந்து போலத் தூக்கி எறியப்படுவார் கீட்டன். பஸ்டரைத் தூக்கி வீசுவதற்கு வசதியாக, அவருடைய கோட்டின் பின்பக்கத்தில் ஒரு சூட்கேஸ் கைப்பிடி தைக்கப்பட்டிருந்தது. அப்பாவால் ஒரு துடைப்பத்தைப் போலத் தரையில் தேய்க்கப்பட்டதால், அவருக்கு "மனிதத் துடைப்பம்" என்றே விளம்பரப் பெயர் வைக்கப்பட்டது.

இந்தக் கொடூரமான வித்தைகள், நியூயார்க்கின் குழந்தைகள் நல அமைப்பான 'கெர்ரி சொசைட்டி'யின் (Gerry Society) கண்களை உறுத்தின. "ஜோ கீட்டன் தன் மகனைத் துன்புறுத்துகிறார், குழந்தையின் உடலில் காயங்கள் உள்ளன, அடியால் அவர் வளர்ச்சி குன்றிவிட்டார்" என்றெல்லாம் புகார்கள் எழுந்தன. பலமுறை பஸ்டர் கீட்டனை மருத்துவர்கள் சோதித்த போதும், அவர் உடலில் ஒரு எலும்பு முறிவோ அல்லது கடுமையான காயங்களோ இருந்ததற்கான எந்தத் தடயமும் சிக்கவில்லை. என்னை யாரும் துன்புறுத்தவில்லை என்று சாதித்தார் பஸ்டர்.

இந்த பால்யம்தான் கீட்டனின் உடல்மொழியை செதுக்கியது. மிக முக்கியமாக, அப்படி அடிபட்டு விழும்போது முகத்தில் வலி தெரிந்தாலோ, அழுதாலோ எடுபடாது. ஆனால், எதுவுமே நடக்காதது போல ஒரு 'இறுகிய முகம்' (Stone Face) காட்டினால், கூட்டம் கைதட்டிச் சிரித்தது! அதுதான் அந்த 'Great Stone Face' உருவான தருணம். எப்படி விழுந்தால் வலிக்காது, எப்படித் தரையிறங்க வேண்டும் என்ற இயற்பியலை அவர் அங்கேயே கற்றுக்கொண்டார். இந்தப் பயிற்சிகள்தான் பிற்காலத்தில் சினிமா வரலாற்றின் ஆகச்சிறந்த ஸ்டண்ட் காட்சிகளுக்கு அடித்தளமிட்டன.

சினிமாவின் கட்டிடக் கலைஞன்

சினிமா உலகில் பொதுவாக நடிகர்கள் தங்கள் ஒப்பனையைப் பற்றி, வசன உச்சரிப்பைப் பற்றி சிந்திக்கையில், கேமராவின் லென்ஸுக்குப் பின்னால் இருக்கும் 'ஷட்டர்' (Shutter) எப்படி இயங்குகிறது என்று சிந்தித்தவர் பஸ்டர் கீட்டன்.

1917ல் ஃபேட்டி ஆர்பக்கிளை (Fatty Arbuckle) சந்தித்தது கீட்டனின் வாழ்வில் ஒரு மிகப்பெரிய திருப்பம். 'தி புச்சர் பாய்' (The Butcher Boy) படத்தில் அறிமுகமான முதல் நாளிலேயே, கேமராவின் தொழில்நுட்பம் அவரைக் கவர்ந்தது.

இரவோடு இரவாக அந்தக் கேமராவை வீட்டுக்கு எடுத்துச் சென்று, அன்றிரவு முழுக்க விழித்திருந்து, அந்த கேமராவை ஒவ்வொரு பாகமாக, ஒவ்வொரு ஸ்க்ரூவாகக் கழற்றினார். லென்ஸ் எப்படி ஒளியை உள்வாங்குகிறது? ஃபிலிம் எப்படி நகர்கிறது? ஷட்டர் எப்படி மூடித் திறக்கிறது? என்பதைப் புரிந்து கொண்ட பிறகுதான், மறுநாள் அதை மீண்டும் பொருத்தினார்.

அதுவரை ஹாலிவுட் பார்த்தது, 'சென்னட்' காலத்து குழப்படியான நகைச்சுவை. ஆனால், கீட்டன் அறிமுகப்படுத்தியது 'வடிவியல் நகைச்சுவை'. (Geometric Comedy)

One Week (1920): புதிதாகத் திருமணமான ஜோடிக்கு ஒரு வீடு பரிசாகக் கிடைக்கிறது. ஆனால், அது 'ரெடிமேட்' வீடு. பெட்டிகளில் வந்திருக்கும் பாகங்களை வைத்து வீட்டைக் கட்ட வேண்டும். ஒரு பொறாமைக்காரன், பெட்டிகளின் எண்களை மாற்றி விடுகிறான். அதன் விளைவாக, கட்டப்பட்ட வீடு பிகாசோவின் கியூபிஸ ஓவியம் போலக் கோணல் மாணலாகிவிடும். அதுவும் போதாதென்று சூறாவளியில் அந்த வீடு ராட்டினம் போலச் சுற்றும். கீட்டன் அந்த வீட்டை ஒரு வெறும் கட்டிடமாகப் பார்க்காமல், உயிருள்ள ஒரு வில்லனாகப் பார்த்தார். அந்தச் சுழலும் வீட்டை வடிவமைத்து, அதற்கான எந்திர நுட்பத்தை உருவாக்கியதும் கீட்டனேதான்.



The Play House (1921): கிராபிக்ஸ் (CGI) இல்லாத கால கட்டத்தில், இப்படத்தில் அவர் செய்த வித்தை, இன்றும் ஆச்சரியம். திரையில் நடக்கும் ஒரு நாடகத்தில், இசைக்குழுவில் இருக்கும் அனைவரும் பஸ்டர் கீட்டனாகவே இருப்பார்கள். வயலின் வாசிப்பவர், டிரம்ஸ் வாசிப்பவர், நடனமாடுபவர் என ஒரே ஷாட்டில் 9 கீட்டன்கள்!



இதை எப்படிச் சாத்தியம் என்று பார்த்தால், அக்காட்சியின் வடிவமைப்பு நம்மை மலைக்க வைக்கிறது. கேமரா லென்ஸ் முன்னால் ஒரு விசேஷமான மூடியை (Shutter) அவரே வடிவமைத்தார். அது லென்ஸின் ஒரு பகுதியை மட்டும் திறக்கும். முதலில் ஓரத்தில் நடிப்பார். பிறகு ஃபிலிமைத் துல்லியமாக ரீவைண்ட் செய்வார். ஷட்டரை நகர்த்துவார். அடுத்த இடத்தில் நடிப்பார். இப்படி ஒன்பது முறை, ஒரு மில்லிமீட்டர் கூடப் பிசகாமல், அதே ஃபிலிம் சுருளில் மீண்டும் மீண்டும் படம்பிடித்தார். ஒருமுறை டைமிங் தப்பியிருந்தாலும், ஒரு கீட்டன் இன்னொரு கீட்டன் மீது ஏறி மிதித்திருப்பார். இது சுத்தமான கணிதம். முன்னோர் இரவில் கேமராவை கழற்றி ஆராய்ந்தது இப்போது அவருக்கு உதவியது. பி.கு: இதே கணிதத்தை பயன்படுத்தித்தான், நவராத்திரி (1964) படத்தில் ஒன்பது சிவாஜியை ஒரே ஷாட்டில் படம்பிடித்திருப்பார்கள்.

Sherlock Jr. (1924): இது ஒரு 'மெட்டா சினிமா' அற்புதம். 'காதலன்' (1994) படத்தின் "என்னவளே" பாடலில் பிரபுதேவாவின் உள்மனம் பறந்து செல்வது போல, திரையரங்கில் புரொஜெக்டராக இருக்கும் கீட்டன், கனவில் திரைக்குள்ளேயே நுழைவார். அதுவரை உலகம் பார்த்திராத 'படத்தொகுப்பு மாயம்' அது. கீட்டன் திரைக்குள் செல்லும் வரை காண்பிக்கப்படுவது முதல் ஷாட், திரைக்குள் சென்றபின் காண்பிக்கப்படுவது இரண்டாவது ஷாட். இவற்றை ஒரே லென்சில், ஒரே



கோணத்தில் துளியும் பிசகாமல் தனித்தனியாக படம்பிடித்து, படத்தொகுப்பில் இணைத்திருப்பார்கள். இன்றைய டிஜிட்டல் உலகில் இது சாத்தியம். ஆனால், அதற்கான எந்த வசதிகளும் இல்லாத 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலகட்டத்தில் இது பெரிய விஷயம்.

இதே படத்தில்தான் ரயில்வே டேங்கிலிருந்து தண்ணீர் கொட்டும் காட்சியில், நீரின் வேகம் தாங்காமல் தண்டவாளத்தில் மோதினார் கீட்டன். பல வருடங்களுக்குப் பிறகு எடுக்கப்பட்ட எக்ஸ்ரேவில்தான் தெரிந்தது, அன்றைய தினம் அவரது கழுத்து எலும்பு உடைந்திருந்தது என்பது. அந்த வலி தெரியாமலேயே இத்தனை நாள் வாழ்ந்திருக்கிறார் என்பது மருத்துவ உலகம் மிரளும் உண்மை.

The General *(1926):* அமெரிக்க உள்நாட்டுப் போரின் பின்னணியில் எடுக்கப்பட்ட இப்படத்தில் ஓடும் ரயிலின் முன்பக்கத்தில் அமர்ந்துகொண்டு,



தண்டவாளத்தில் கிடக்கும் கனமான மரக்கட்டையை, ரயில் தன் மீது ஏறுவதற்கு சில நொடிகள் முன்பாகத் தூக்கி வீசுவார். அது ஒரு நேரம் மூலம் துல்லியமாகத் திட்டமிடப்பட்ட இயற்பியல் பாடம். அந்த மரக்கட்டை கனமானது, ரயிலும் உண்மையானது. அந்தக் காட்சியில் ரயிலின் வேகம் மணிக்கு சுமார் 20 முதல் 25 மைல்கள்.

இப்படத்தின் இன்னொரு காட்சியில் ஒரு பாலம் இடிந்து ரயில் ஆற்றில் விழும். இது அக்காலத்தின் மிக அதிக செலவு ($42,000) பிடித்த காட்சி. (இன்றைய இந்திய மதிப்பில் 6.5 கோடி) இதற்காகவே ஒரு நிஜ ரயிலை ஆற்றில் இறக்கியிருக்கிறார்.

Steamboat Bill, Jr. *(1928):* இந்தப் படத்தில் வரும் அந்த விபரீதக் காட்சியை யாராலும் மறக்க முடியாது. இரண்டு டன் எடையுள்ள ஒரு வீட்டின் முகப்பு சுவர் அப்படியே கீட்டன் மேல் விழும். அவர் நின்றுகொண்டிருக்கும் இடத்தில் மிகச்சரியாக அந்த வீட்டின் ஜன்னல் இடைவெளி இருக்கும். அதனால் அவர் தப்பிப்பார்.



இதில் எந்த வித்தையும் இல்லை; துல்லியமான கணிதம். அந்தச் சுவர் விழும்போது, அவரது தோள்பட்டைக்கும் சுவருக்கும் இருந்த இடைவெளி வெறும் இரண்டு அங்குலங்கள் மட்டுமே! கொஞ்சம் நகர்ந்திருந்தாலும் கீட்டன் உடல் நசுங்கி இறந்திருப்பார்.

அவருக்கு 'பஸ்டர்' என்று பெயர்



வந்ததற்குச் சொல்லப்படும் கதை சுவாரஸ்யமானது. அவர் குழந்தையாக இருந்தபோது, படிக்கட்டிலிருந்து உருண்டு விழுந்தும் சிராய்ப்பு கூட இல்லாமல் அந்தக் குழந்தை சிரித்ததைப் பார்த்த மாயாஜால வித்தைக்காரர் ஹாரி ஹௌடினி, "That was quite a buster!" (என்ன ஒரு வீழ்ச்சி) என்று வியந்தாராம். பின்னாளில் அதுவே பெயராகிவிட்டதாக கூறப்படுகிறது. ஆனால் கீட்டனின் வாழ்க்கையே அப்படித்தான் இருந்தது.

விதியை மாற்றிய கையெழுத்து

1928ம் ஆண்டு. அதுவரை வானத்தில் சுதந்திரமாகப் பறந்து கொண்டிருந்த ஒரு கழுகு, தாமாகவே சென்று ஒரு தங்கக் கூண்டுக்குள் தலையை விட்ட கதை இது.

மிக அதிக பட்ஜெட்டில் தயாரான 'தி ஜெனரல்', 'காலேஜ்', 'ஸ்டீம்போட் பில்' போன்ற திரைப்படங்கள், இன்று உலக சினிமாவின் மிகச் சிறந்த திரைப்படங்களின் ஒரு அங்கம். ஆனால், அன்று விமர்சன ரீதியாகவும் வசூல் ரீதியாகவும் அத்திரைப்படங்கள் தோல்வியடைந்தன. இதனால் கீட்டனின் வாழ்க்கை தலைகீழானது. கீட்டனின் தயாரிப்பாளரும், மைத்துனருமான ஜோசப் ஷென்க் (Joseph Schenck), கீட்டனை எம்.ஜி.எம் (MGM) ஸ்டூடியோவுக்கு மாறும்படி வற்புறுத்தினார்.

"வேண்டாம், அவர்கள் உன்னை அழித்துவிடுவார்கள்" என்று சாப்ளின் எச்சரித்தார். ஆனால், வேறு வழியின்றி கீட்டன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். பிற்காலத்தில், "என் வாழ்க்கையில் நான் செய்த மிகப்பெரிய தவறு அது" என்று கீட்டனே ஒப்புக்கொண்டார்.

அதுவரை தனது சொந்த ஸ்டூடியோவில், கதை இல்லாமல், நம்மூர் மணிவண்ணனைப் போல் சுதந்திரமாகச் செயல்பட்டவர் கீட்டன். ஒரு சின்ன ஐடியா இருக்கும். "இதை வைத்து என்ன செய்யலாம்?" என்று கீட்டனும் அவரது குழுவும் அதே இடத்தில் கதையை மெருகேற்றுவார்கள். அது ஒரு இயற்கையான முறை.

ஆனால், எம்.ஜி.எம் ஒரு கார்ப்பரேட் நிறுவனம். ஒரு பேனா வேண்டும் என்றாலும் மூன்று விண்ணப்பங்கள் எழுதித் தர வேண்டும். அங்கே கதை இல்லாமல் வேலை செய்ய முடியாது. "கேமராவை ஆன் செய், பிறகு நாம் பார்த்துக்கொள்ளலாம்" என்ற கீட்டனின் பாணி அங்கே எடுபடவில்லை. அவரது நம்பிக்கையான 'நகைச்சுவை எழுத்தாளர்கள்' (Gag Writers) குழு கலைக்கப்பட்டது. அவர்களுக்குப் பதிலாக, நகைச்சுவை உணர்வே இல்லாத, மேஜை எழுத்தாளர்கள் எழுதிய காட்சிகளை வைக்கும்படி வற்புறுத்தினார்கள். கீட்டனின் சுதந்திரம் பறிபோனது.

பேசும் படங்களும், பேசாத வலியும்

1927ல் 'தி ஜாஸ் சிங்கர்' (The Jazz Singer) வந்தது. உலகம் சப்தத்தை நோக்கித் திரும்பியது. கீட்டனுக்குப் பேசுவதில் பிரச்னை இல்லை, அவருக்கு நல்ல குரல்வளம் இருந்தது. ஆனால், எம்.ஜி.எம் கீட்டனின் மௌன மொழியைப் புரிந்து கொள்ளவேயில்லை.

காட்சி மொழியில் மன்னனாக

இருந்தவனை, அவர்கள் மலிவான வார்த்தை விளையாட்டுகளுக்குள் சுருக்கினார்கள். கொடுமையின் உச்சமாக, ஜிம்மி டூராண்டி (Jimmy Durante) என்ற நடிகருடன் கீட்டனை ஜோடி சேர்த்தார்கள். ஜிம்மி ஒரு இரைச்சல் பேர்வழி, கீட்டன் ஒரு அமைதிப் புயல். கீட்டனின் நுண்ணிய அசைவுகளை விட, டூராண்டேவின் கூச்சலே எடுபட்டது. கீட்டன் ஒரு துணை நடிகர் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

ஸ்டுடியோவில் ஏற்பட்ட அவமானம் அவரை மனதளவில் பாதித்தது. அந்த இரைச்சலான உலகத்தை மறக்க, போதையைத் தேடினார். கடுமையான குடிப் பழக்கத்திற்கு அடிமையானார். இது அவரது திருமண வாழ்க்கையையும் சிதைத்தது. 1932இல் மனைவி நடாலி 'தல்மேட்ஜ்' அவரை விவாகரத்து செய்தார். தன் பிள்ளைகளைக் கூட பார்க்க முடியாத நிலைக்கு கீட்டன் தள்ளப்பட்டார். தனது புகழ்பெற்ற 'இத்தாலியன் வில்லா' வீடு உட்பட எல்லாவற்றையும் இழந்தார். சிரிக்காத மன்னன் நிஜமாகவே சிரிக்க மறந்து போனான்.



நடாலி 'தல்மேட்ஜ்'

முன்பு அவருக்கு மருந்தாக இருந்த மது, ஒரு கட்டத்தில் அதுவே உணவானது. படப்பிடிப்புக்குத் தாமதமாக வந்தார். சில சமயம் வரவே இல்லை. கண்கள் கலங்கி, கால்கள் தள்ளாடின. இதைப் பார்த்த எம்.ஜி.எம் நிறுவனம் "இனி இவன் பயனற்றவன்" என்று முத்திரை குத்தி, கீட்டனைத் தூக்கியெறிந்தது.

ஒரு காலத்தில் கோடிகளில் புரண்ட, சொந்தமாக ஸ்டுடியோ வைத்திருந்த, உலகத்தையே தன் விரல் அசைவில் சிரிக்க வைத்த கீட்டன், 1934இல் தன்னை திவால் ஆனவராக அறிவித்தார். ஒரு கட்டத்தில் குடிபோதையில் என்ன செய்கிறோம் என்றே தெரியாமல், தன் செவிலியராக இருந்த 'மே ஸ்க்ரிவன்' என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். பின்னர் அதுவும் விவாகரத்தில் முடிந்தது.



மே ஸ்க்ரிவன்

பிழைப்புக்காக மீண்டும் எம்.ஜி.எம் ஸ்டூடியோவிற்கே, 'நகைச்சுவை எழுத்தாளர்' பணிக்குச் சென்றார். முன்பு வாரத்திற்கு 1000 டாலர் அள்ளிக்கொடுத்த அதே எம்.ஜி.எம் நிறுவனம், இப்போது வாரம் வெறும் 100-300 டாலர்கள் மட்டுமே அளித்தது. மார்க்ஸ் பிரதர்ஸ் (Marx Brothers) போன்ற புதிய நகைச்சுவைக் கலைஞர்களுக்கு, கீட்டன் எழுதிக்கொடுத்த நகைச்சுவைக் காட்சிகள் சரியாக புரிந்துகொள்ளப்படாமல் அவர் கண் முன்பாகவே வீணாகிக் கொண்டிருந்தன. 1928 முதல் 1933 வரையிலான அந்த ஐந்து ஆண்டுகள், ஒரு மகத்தான கலைஞனை கார்ப்பரேட் உலகம் எப்படி விழுங்கி ஏப்பம் விடும் என்பதற்கான சாட்சியம்!



எலினோர் நோரிஸ்

ஏன் சாப்ளின் முந்தினார்?

சினிமா வரலாற்றில் இது ஒரு மில்லியன் டாலர் கேள்வி. திறமையில் இருவரும் சளைத்தவர்கள் இல்லை. சொல்லப்போனால், சினிமா இலக்கணத்தின்படி பார்த்தால், கீட்டன் சாப்ளினை விட ஒருபடி மேலே நின்றார். ஆனாலும், 20ம் நூற்றாண்டு முழுக்க உலகம் சாப்ளினையே கொண்டாடியது. கீட்டனை மறந்தது ஏன்?

இதற்கான விடை என்பது உளவியல், வணிகம் மற்றும் தொழில்நுட்பம் கலந்த ஒரு கலவை. மனிதன் அடிப்படையில் பலவீனமானவன். அவன் எப்போதுமே ஆறுதலைத் தேடுகிறான். சார்லி சாப்ளினின் ‘லிட்டில் ட்ராம்ப்’ (Little Tramp) கதாபாத்திரம், மக்களின் அடிமனதின் பலவீனத்தைத் தொட்டது. கிழிந்த கோட், பெரிய ஷூ, கையில் ஒரு குச்சி. அவன் ஒரு அனாதை, காதலுக்கு ஏங்குபவன். சாப்ளின் பார்வையில் ஒரு கெஞ்சல் இருக்கும். “எனக்கு யாருமே இல்லை, நான் பாவம்” என்று அந்த கண்கள் சொல்லும். பார்வையாளன் அந்த சோகத்தில் தன்னைப் பொருத்திப் பார்த்துக்கொண்டான்.

ஆனால் கீட்டன் ஒரு அறிவுஜீவி. அவர் யாரிடமும் கெஞ்சவில்லை. “உலகம் இடிந்து விழுந்தாலும் நான் சமாளிப்பேன்” என்று நின்றார். அவரின் இறுகிய முகம் பார்வையாளனிடம் அனுதாபத்தை விட, ஆச்சரியத்தை மட்டுமே கோரியது. உளவியல் ரீதியாக, மக்கள் அறிவை விட, உணர்ச்சிக்கே சட்டென்று அடிமையாவார்கள். மூளையை வேலை வாங்க வைத்த கீட்டனை விட, இதயத்தை உருக வைத்த சாப்ளின் எளிதாக வென்றார்.

சாப்ளினின் பலம் அவரின் முகபாவனைகள். அவர் சிரிக்க, அழ, வெட்கப்படத் தெரிந்தவர். அதனால் அவருக்கான பிரதான ‘குளோஸ்அப்’ (Close up) ஷாட்கள் தேவைப்பட்டன. அது ரசிகர்களுடன் ஒரு நெருக்கத்தை உண்டாக்கியது. ஆனால் கீட்டனின் நகைச்சுவை, சூழலைச் சார்ந்தது.



பிரம்மாண்டமான ரயில், சுழலும் வீடு, ஓடும் கூட்டம் என இவற்றிற்கும் தனக்கும் உள்ள தொடர்பைக் காட்ட அவருக்கு ‘வைட் ஆங்கிள்’ (Wide Angle) அல்லது 'மிட் ஆங்கிள்’ (Mid Angle) தேவைப்பட்டது. தூரத்தில் நின்று சர்க்கஸ்காரனைப் போல் வித்தை காட்டும் ஒருவனாகத்தான் கீட்டனை மக்கள் பார்த்தார்களே தவிர, அவனைத் தங்களில் ஒருவனாக ஏற்கத் தயங்கினார்கள்.

கலை தாண்டி வணிகம் என்று பார்த்தால், சார்லி சாப்ளின் அதில் ஒரு சிறந்த வியாபாரி. 1919இலேயே, டக்ளஸ் ஃபேர்பேங்க்ஸ் மற்றும் மேரி பிக்ஃபோர்ட் ஆகியோருடன் இணைந்து ‘யுனைடெட் ஆர்ட்டிஸ்ட்ஸ்’ (United Artists) என்ற சொந்த விநியோக நிறுவனத்தைத் தொடங்கினார். இதன் மூலம், தன் படங்களின் காப்புரிமை மற்றும் விநியோக உரிமையை முழுமையாகத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார். அவருக்குத் தேவைப்படும் போதெல்லாம் படங்களை மறுவெளியீடு செய்தார்; விளம்பரப்படுத்தினார். தன்னை ஒரு ‘பிராண்டாக’ மாற்றிக்கொண்டார். கீட்டன் இதில் கோட்டை விட்டார். எம்.ஜி.எம் நிறுவனத்திடம் தன்

சுதந்திரத்தை விற்ற அவர், ஒரு கட்டத்தில் தன் சொந்தப் படங்களின் மீதான உரிமையையே இழந்தார்.

சாப்ளின் வாழ்ந்த 1920-30 காலகட்டம், பெரும் பொருளாதார மந்தநிலை (Great Depression) நிலவிய காலம். பசியும், ஏழ்மையும் தலைவிரித்தாடியது. அந்த நேரத்தில், பணக்காரர்களைக் கேலி செய்யும், திருடித் தின்னும் சாப்ளினின் பாத்திரம் மக்களுக்குத் தேவைப்பட்டது.

ஆனால் கீட்டன், மனிதனுக்கும் இயந்திரத்துக்கும் இடையிலான போராட்டத்தைப் பேசினார். அன்றைய மக்களுக்கு அது புரியவில்லை. ஆனால், கணினியும், செயற்கை நுண்ணறிவும் (AI) நம்மை ஆட்டிப்படைக்கும் இன்றைய 21ஆம் நூற்றாண்டுச் சூழலில், சாப்ளினை விட கீட்டன் நமக்குப் பிடித்துப் போகிறார்.

தொலைந்துபோன படங்கள்

இன்றைய ‘கிளவுட்’ (Cloud) யுகத்தில், ஒரு போட்டோவை அழிப்பதுகூட கடினம். ஆனால், 1920களில் நிலைமை தலைகீழ். ஒரு படத்தை அழியாமல் காப்பாற்றுவதுதான் பெரும் சவால்.

அன்றைய ஃபிலிம் சுருள்கள் ‘சில்வர் நைட்ரேட்’ (Silver Nitrate) எனும் வேதிப்பொருளால் ஆனவை. இவை தீப்பற்றினால் அணைக்கவே முடியாது, தண்ணீருக்கடியில் கூட எரியும். காலப்போக்கில் இவை தானாகவே சிதைந்து, பிசுபிசுப்பான ஜெல்லியாக மாறி, இறுதியில் வெடிமருந்துப் பொருளாக மாறிவிடும்.

சினிமா வரலாற்றின் படி, மௌனப் படக் காலத்தில் எடுக்கப்பட்ட படங்களில் சுமார் 75 சதவிகிதம் இன்று இல்லை. அவை இருந்ததற்கானத் தடயமே இல்லாமல் அழிந்துவிட்டன. பஸ்டர் கீட்டனின் படங்களும் இந்த ஆபத்தின் விளிம்பில் நின்றவைதான். கீட்டனின் பல அரிய படங்கள் முற்றிலும் அழிந்துவிட்டதாகவே கருதப்பட்டன.







குப்பையில் கிடைத்த புதையல்

இங்குதான் விதி ஒரு அழகான விளையாட்டை விளையாடியது. 1952ஆம் ஆண்டு, பிரபல ஹாலிவுட் நடிகர் ஜேம்ஸ் மேசன் (James Mason), பெவர்லி ஹில்ஸில் இருந்த பஸ்டர் கீட்டனின் பழைய வீட்டை (The Italian Villa) விலைக்கு வாங்கினார். வீட்டைச் சுத்தம் செய்யும்போது, தோட்டத்திலிருந்த ஒரு பழைய கொட்டகையில், தூசி படிந்த நிலையில் சில தகர டப்பாக்களைக் கண்டார். திறந்து பார்க்கையில், அதில் பஸ்டர் கீட்டனின் திரைப்படங்களுடைய ‘மாஸ்டர் பிரிண்டுகள்’ (Master Prints) அங்கே கிடந்தன.

பல சுருள்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டி, பாழாகியிருந்தன. ஆனால், 'தி ஜெனரல்', 'கேமராமேன்' போன்ற பல பொக்கிஷங்கள் உயிர் பிழைத்திருந்தன. ஜேம்ஸ் மேசன் உடனடியாகப் புகழ்பெற்ற திரைப்பட ஆவணக்காப்பாளர் ரேமண்ட் ரோஹர் (Raymond Rohauer) என்பவரைத் தொடர்பு கொண்டார். அந்த ஒரு தொலைபேசி அழைப்பு இல்லையென்றால், இன்று நாம் யூடியூபில் பார்க்கும் கீட்டனின் பல சாகசங்கள் இருந்திருக்காது.

எவ்வளவு தேடியும், மீட்க முடியாத சில இழப்புகளும் உண்டு. 1917இல் ஃபேட்டி ஆர்பக்கிள் மற்றும் பஸ்டர் கீட்டன் இணைந்து நடித்த 'எ கன்ட்ரி ஹீரோ' (A Country Hero) என்ற திரைப்படம், இன்று வரை கிடைக்கவில்லை. அந்தப் படம் எப்படி இருக்கும் என்று சொல்ல, நம்மிடம் மிச்சமிருப்பது சில புகைப்படங்களும், பத்திரிகைக் குறிப்புகளும் மட்டுமே.



கீட்டன் ஒரு பேட்டியில், "என் ஆரம்பகாலப் படங்களில், சில படங்கள் போதிய தரத்துடன் இல்லை என்பதால் நானே எரித்திருக்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார். ஒரு கலைஞனுக்குத் தன் படைப்பின் மீதே இருந்த அந்த அதிருப்திதான், பல சமயங்களில் அழிவுக்குக் காரணமாகவும் இருந்திருக்கிறது.

மீண்டு வந்த கலைஞன்

திரைக்கதை இத்துடன் முடிந்திருக்க வேண்டும். குடிகாரனாகி, வேலையிழந்து, மறக்கப்பட்ட ஒரு பழைய நடிகராக அவர் மறைந்திருக்க வேண்டும். ஆனால், விதி அவரை முற்றிலுமாக கைவிடவில்லை. 1940இல் தன்னைவிட 23 வயது இளையவரான எலினோர் நோரிஸ் (Eleanor Norris) என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். மனச்சோர்விலும், வறுமையிலும் சிக்கித் தவித்த 1940களில், அவரை மீட்டெடுத்தவர் எலினார்தான். மீண்டு எழுந்தவர், 1950களில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் (The Twilight Zone) மற்றும் விளம்பரங்களில் (Alka-Seltzer) தோன்றத் துவங்கினார். உலகம் மெல்ல மெல்லத் தன் தவறை உணர்ந்தது.

கீட்டனுக்கும் சாப்ளினுக்கும் போட்டி என்று சொல்லப்பட்டாலும், உண்மையில் அவர்கள் நல்ல நண்பர்கள். 1952இல் சாப்ளின் தனது 'லைம்லைட்' (Limelight) படத்தில் கீட்டனுக்கு ஒரு வாய்ப்பு கொடுத்தார். இந்தப் படம் அவருக்குப் பெரிய மரியாதையைப் பெற்றுத் தந்தது. திரையுலகின் இரு பெரும் ஜாம்பவான்களும் ஒன்றாகத் தோன்றிய ஒரே படம் அதுதான். கேப்டன் விஜயகாந்தை இறந்த பின் கொண்டாடும் நம் சமூகத்தைப் போலவே, பஸ்டர் கீட்டனை பார்த்து "அடடா... இவரைத்தானே நாம் இத்தனை காலம் மறந்திருந்தோம்!" என்ற குற்றவுணர்ச்சி ஹாலிவுட்டுக்கு வந்தது.

1960இல் ஹாலிவுட் அவருக்கு 'வாழ்நாள் சாதனையாளர்' ஆஸ்கர் விருதை வழங்கியது. 1965ஆம் ஆண்டு, கீட்டனின் வாழ்நாளின் கடைசி வருடம். இலக்கிய உலகமே கொண்டாடிய நோபல் பரிசு பெற்ற நாடக ஆசிரியர் சாமுவேல் பெக்கெட் (Samuel Beckett), கீட்டனைத் தேடி வந்தார். பெக்கெட், மனித வாழ்வின் அர்த்தமற்ற வெறுமையை (Existential Void) எழுதியவர். கீட்டன், அந்த வெறுமையை அமைதியாக எதிர்கொண்டவர். இருவரும் இணைந்து 'ஃபிலிம்' (Film, 1965) என்ற பெயரிலேயே, வசனமற்ற ஒரு குறும்படத்தை உருவாக்கினார்கள்.

வெனிஸ் திரைப்பட விழாவில் இந்தப் படம் திரையிடப்பட்டது. படம் முடிந்ததும், அரங்கமே எழுந்து நின்றது.



ஐந்து நிமிடங்கள், இடைவிடாத கரகோஷம். தன் வாழ்நாள் முழுவதும் சிரிக்காத, கழுத்து எலும்பு உடைந்தபோது கூட கலங்காத அந்த 69 வயதுக் கிழவர், மேடையில் கண்கலங்கினார். “முப்பது வருடங்கள் தாமதம்” என்று அவர் சொன்னாலும், வாழ்நாள் முழுவதும் எதற்காக ஓடினாரோ, எதற்காக விழுந்தாரோ, அதற்கான அங்கீகாரம் அவருக்கு மீண்டும் கிடைத்தது.

நவீன சினிமாவின் முன்னோடி

இன்று நாம் கொண்டாடும் ஜாக்கி சான் முதல் டாம் குரூஸ் வரை, “CG வேண்டாம், ரியல் ஸ்டண்ட் வேண்டும்” என்று சொல்லும் அத்தனை ஆக்‌ஷன் ஹீரோக்களுக்கும் பஸ்டர் கீட்டனே குரு. தற்காப்புக் கலைக்கும் நகைச்சுவைக்கும் முடிச்சுப் போட்ட ஜாக்கி சானின் ‘குங்ஃபூ நகைச்சுவை’, கீட்டனின் பாணியிலிருந்து உருவானதே. ‘ப்ராஜெக்ட் ஏ’ (Project A) படத்தில் மணிக்கூண்டு கோபுரத்திலிருந்து ஜாக்கி சான் கீழே விழும் காட்சி, கீட்டனுக்குச் செய்யப்பட்ட சமர்ப்பணம். இன்று, ‘பார்க்கர்’ (Parkour) என்று அழைக்கப்படும், தடைகளைத் தாண்டி ஓடும் வித்தைக்கு (உதா: District B13, 2004) 100 ஆண்டுகளுக்கு முன்பே இலக்கணம் வகுத்தவர் இவர்.

வெஸ் ஆண்டர்சனின் (Wes Anderson) படங்களின் மையச்சீரமைப்பும் (Symmetry), அந்த முகபாவனைகளும் கீட்டனின் நீட்சி. இவ்வளவு ஏன், 90ஸ் கிட்ஸ் விளையாடிய ‘சூப்பர் மாரியோ’ போன்ற வீடியோ கேம்கள் கூட கீட்டனின் அந்தத் தடைகளைத் தாண்டும் ஓட்டத்திலிருந்து உருவானவைதான்.

இந்தியாவில் ‘ராஜ் கபூர்’ சார்லி சாப்ளினை முன்னுதாரணமாகக் கொண்டாலும், கமல் ஹாசன் போன்ற தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் சர்க்கஸ் சாகசங்களை அடிப்படையாகக் கொண்ட பழைய இந்தியப் படங்களில் (உதா: அபூர்வ சகோதரர்கள் குள்ளமான கமல் காட்சிகள்) கீட்டனின் பொறியியல் நுட்பத்தின் தாக்கம் உண்டு.

இறுதிக் காட்சி

வாழ்நாள் முழுவதும் சத்தமில்லாத உலகத்தில் வாழ்ந்த அந்த மனிதரின் முடிவும், ஒரு மெல்லிய பெருமூச்சைப் போலவே நிகழ்ந்தது.

ரயில்களில் இருந்து குதித்தவர், சூறாவளியில் சிக்கியவர், இரண்டு டன் எடையுள்ள வீட்டின் சுவர் தன் மீது விழும்போது இமைக்காமல் நின்றவர், இறுதியில் நுரையீரல் புற்றுநோயால் வீழ்ந்தார். அவருக்கு வந்தது முற்றிய நிலை புற்றுநோய் - இடைவிடாத புகைபிடித்தலின் பரிசு. ஆனால், வேடிக்கை என்னவென்றால், சாகும் வரை தனக்குப் புற்றுநோய் இருக்கிறது என்ற விஷயம் கீட்டனுக்குத் தெரியவே தெரியாது.

மருத்துவர்களும், அவரின் மூன்றாவது மனைவி எலினார் நோரிஸ் (Eleanor Norris)ம் “உங்களுக்கு வந்திருப்பது

கடுமையான ‘பிராங்கைடிஸ்’ (Bronchitis) எனப்படும் மூச்சுக்குழாய் அழற்சிதான்” என்று அவரிடம் பொய் சொன்னார்கள். கடைசி நிமிடம் வரை, தான் விரைவில் குணமடைந்து விடுவோம் என்ற நம்பிக்கையில்தான் அவர் இருந்தார்.

பிப்ரவரி 1, 1966. அது ஒரு சாதாரண மாலைப் பொழுது. கீட்டன் தனக்குப் பிடித்தமான ‘பிரிட்ஜ்’ (Bridge) சீட்டு விளையாட்டை விளையாடிக் கொண்டிருந்தார். வழக்கத்தை விடச் சற்று அதிகமாகவே இருமல் இருந்தது. கையில் இருந்த சீட்டுகளை கீழே வைத்துவிட்டு, “எனக்குச் சற்று களைப்பாக இருக்கிறது” என்று படுக்கையறைக்குச் சென்றார். மனைவி எலினார் அருகில் அமர்ந்திருந்தார். எந்த விதமான நாடகத்தன்மையும் இல்லாமல், எந்த விதமான இறுதி வசனங்களும் இல்லாமல், பழுத்த இலை காம்பிலிருந்து பிரிவதைப் போல, தூக்கத்திலேயே அவருடைய உயிர் பிரிந்தது. அப்போது அவருக்கு வயது 70.

வெனிஸ் விழாவில் கிடைத்த கைதட்டல், தொலைக்காட்சியில் கிடைத்த வருமானம், எல்லாவற்றிற்கும் மேலாக நிம்மதியான குடும்ப வாழ்க்கை. ஒரு முழுமையான வாழ்க்கையை வாழ்ந்து முடித்த திருப்தியோடுதான் அவர் விடைபெற்றார். அவர் இறந்தபின், உலகம் அவரை மீண்டும் கொண்டாடித் தீர்த்திருந்தது.

அவர் சவப்பெட்டியில் கிடத்தப்பட்டபோது, அவர் கையில் ஒரு ‘ரோசரி’ மாலையும், பாக்கெட்டில் ஒரு சீட்டுக்கட்டும் வைக்கப்பட்டிருந்தது. ஆம், கடவுளிடம் போய் விளையாடுவதற்காகத் தயாராகவே சென்றார்.

இயக்குநர் ‘ஆர்சன் வெல்ஸ்’ (Orson Welles) கூறியது போல, “திரைப்பட வரலாற்றின் மிகச்சிறந்த கோமாளி மட்டுமல்ல, திரையில் தோன்றிய மிக அழகான மனிதர்களில் ஒருவர்.”



பஸ்டர் கீட்டன் நமக்குக் கற்பிக்கும் பாடம் ஒன்றுதான்: உலகம் நம் தலைக்கு மேல் இடிந்து விழுந்தாலும், கலங்காமல் அந்தச் சிறு ஜன்னல் இடைவெளியைத் தேடிப் பிடித்து உயிர் பிழைக்க வேண்டும்.

தனது திரைப்படங்களில் அவர் எப்போதுமே சிரித்ததில்லை. ஆனால், சவப்பெட்டியில் உறங்கும்போது, அவர் முகத்தில் ஒரு மெல்லிய நிம்மதி தெரிந்தது. வாழ்க்கை எனும் அந்த நீண்ட படப்பிடிப்பு முடிந்தது.

“பேக் அப்!”

ஆகஸ்ட்
செப்டம்பர்
2026

ஆசிரியர்: சுதேசமித்திரன்

ஆவநாழி

₹100

கலை சினிமா இலக்கிய மென்னிதழ்

இதழ் 37
நாழி 6
ஆவம் 1

தரு
வெளியீடு



நாஞ்சில் நாடன்
சுகுமாரன்
யுவன் சந்திரசேகர்
எம்.கோபாலகிருஷ்ணன்
யதிராஜ ஜீவா
சித்ரா சிவன்
கௌஷிக் ராஜன்
ஓவியர் டோரதி
ஜி.ஏ.கௌதம்
ஜீனத்
மு.ஆறுமுகவிக்னேஷ்
ஆர்.கே.ஜி
ச.சத்தியபானு
சைத்ரீகன்
நிர்மல்
இரா.முருகவேள்
முனவர் கான்
சுபாஷ் சந்திரன்
சாதிக் ஹெதாயத்,
கெ.பி.சமத்
ஃபங்கி ரோனின்
முத்துச் செல்வன்
வில்லா கேத்தர்
பாலா இளம்பிறை
சக்திவேல் கோபிசெட்டிபாளையம்
புதுவை இளவேனில்
ஓவியர் ஜீவா
அரவிந்த் வடசேரி
சுதேசமித்திரன்

உலக சினிமாவின் முதல் ஆக்ஷன் ஹீரோ: பஸ்டர் கீட்டன் 130

– ஜி.ஏ.கௌதம்

7ஆம் ஆண்டு சிறப்பிதழ்

aavanalzhi